


Akershus
Aust-Agder
Buskerud
Finnmark
Hedmark
Hordaland
Møre og Romsdal
Nordland
Nord-Trøndelag
Oppland
Oslo
Rogaland
Sogn og Fjordane
Sør-Trøndelag
Telemark
Troms
Vest-Agder
Vestfold
Østfold

# நோர்வேயிலுள்ள மாகாணங்கள்

# FYLKENE I NORGE

நிர்வாகத்தை இலகுவாக்குவதற்காக எந்த ஒரு நாடும் மாகாணங்களாக பிரிக்கப்படுவது வழமை. அந்த வகையில் நோர்வேயும் தனித்தனிப் பிரதேசங்களைக் கொண்ட நிர்வாக அலகுகளாக 19 மாகாணங்களாகப் பிரிக்கப்பட்டுள்ளது. இந்த ஒவ்வொரு மாகாணத்திலும் அங்கு வாழும் மக்களது பொதுச் சேவைகளை நிவர்த்தி செய்யும் மாகாணசபை நிர்வாகம் அமைந்திருக்கும். அரசாங்கத்தின் நேரடிப் பிரதிநிதியாக ஒரு மாகாண ஆளுனரும், மாகாணசபைக்கான மாகாண முதல்வரும் மாகாண நிர்வாக சேவைகளை நெறிப்படுத்துகிறார்கள்.

நோர்வேயின் அமைவைப் பொறுத்து கிழக்குநோர்வே, மேற்குநோர்வே, தெற்குநோர்வே, வடநோர்வே, மத்தியநோர்வே என ஐந்து முக்கிய பகுதிகளாக பிரிக்கப்படுகிறது. மாகாணங்களும் இந்த நாட்டின் வேறுபட்ட பகுதிகளுக்கு உள்ளேயே பகுத்து நிறற்படுத்தப்பட்டிருக்கிறது. அந்த வகையில் OSLO, AKERHUS, ØSTFOLD, VESTFOLD, HEDMARK, OPPLAND, BUSKERUD, TELEMARK ஆகிய 8 மாகாணங்களும் கிழக்கு நோர்வே பகுதிக்குள் அடங்குகின்றன. ROGALAND, HORDALAND, SOGN OG FJORDANE, MØRE OG ROMSDAL ஆகிய 4 மாகாணங்களும் மேற்கு நோர்வே பகுதிக்குள் அடங்குகின்றன. AUST-AGER, VEST–AGDER ஆகிய 2 மாகாணங்களும் தெற்கு நோர்வே பகுதிக்குள் அடங்குகின்றன. SØR-TRØNDELAG, NORD-TRØNDELAG ஆகிய 2 மாகாணங்களும் மத்திய

நோர்வே பகுதிக்குள் அடங்குகின்றன. NORDLAND, TROMS, FINNMARK ஆகிய 3 மாகாணங்களும் வடநோர்வே பகுதிக்குள் அடங்குகின்றன.

மக்களுக்கு சென்றடைய வேண்டிய பொதுச்சேவைகள் சரியான முறையில் நடைமுறைப்படுத்தப்படுவதையும், சட்டமூலங்கள் சரியாக பின்பற்றப்படுவதையும் இம் மாகாண சபைகள் கண்காணிக்கின்றது. இவற்றிலிருந்து நகரசபைகளுக்கான பொறுப்புக்களும் பின்னர் பிரித்து வரையறை செய்யப்படுகின்றது. தமக்குரிய நிர்வாக பிரதிநிதிகளை தெரிவுசெய்யும் வாய்ப்பும் இம் மாகாண மக்களுக்கு வழங்கப்படுகிறது. நான்கு வருடத்திற்கு ஒருமுறை நடைபெறும் தேர்கள் மூலம் மாகாண முதல்வரும், மாகாணசபை அங்கத்தவர்களும் தெரிவு செய்யப்படுகிறார்கள். ஒவ்வொரு மாகாணமும் தம்மை வெளிப்படுத்தும் தமக்கான ஒரு சின்னத்தை கொண்டிருக்கும். அம் மாகாணத்திற்குரிய ஒரு சிறப்பான பொருள் அல்லது பிரபல்யமான விடயம் ஏதாவது அச்சின்னத்தில் சிறப்பிடம் பெறும்.

நோர்வேயிலுள்ள மாகாணங்களில் OSLO, AKERSHUS என்பவற்றிலேயே மக்கள் செறிந்து வாழ்கிறார்கள். இங்கு ஏறத்தாழ 10 இலட்சம் மக்கள் வசிப்பதாக கணிக்கப்பட்டுள்ளது. OSLO ஒரு மாகாணமாகவும் அதே சமயம் ஒரு நகரசபைப் பகுதியாயும் அமைந்திருக்கின்றது. TROMS, NORDLAND, NORD-TRØNDELAG, SØR-TRØNDELAG, HEDMARK, AKERSHUS, ØSTFOLD என்பன அயல்நாடான சுவீடனுடன் எல்லைகளைக் கொண்டுள்ளன.

VEST-AGDER மாகாணம் நோர்வேயின் அதி தென்பகுதியில் அமைந்துள்ளது. இதே போன்று FINMARK மாகாணம் அதி வடக்குப் பகுதியில் அமைந்துள்ளது. இதுவே ருஷியாவையும் பின்லாந்தையும் எல்லையாக கொண்டிருக்கின்றது. நள்ளிரவுச் சூரியதேசம் என நோர்வே அழைக்கப்பட காரணமான நள்ளிரவுச் சூரியனை FINNMARK, TROMS, NORDLAND ஆகிய மாகாணங்களில் காணலாம். NORDLAND மாகாணமானது ஒடுங்கிய அதேநேரம் நோர்வேயின் நீண்ட மாகாணம் என்ற சிறப்பையும் பெறுகிறது.

வினாக்கள் :

1. நோர்வே எத்தனை மாகாணங்களாகப் பிரிக்கப்பட்டுள்ளது?
2. மேற்கு நோர்வே பகுதிக்குள் அடங்குகின்ற மாகாணங்கள் எவை?
3. NORDLAND மாகாணத்திற்கு உள்ள இரண்டு சிறப்பம்சங்கள் கூறுக?
4. நோர்வேயில் மாகாணசபையாகவும் நகரசபையாகவும் விளங்கும் ஒரே ஒரு நகரம் எது?
5. ருஷியாவையும் பின்லாந்தையும் எல்லையாக கொண்டிருக்கும் நோர்வே மாகாணம் எது?